දූරකථන தொலைபேசி Telephones } 011-2136600 011-2136650
ලේකම් செயலாளர் Secretary } 011-2136602
ෆැක්ස් தொலைநகல் Fax } 011-2876169 011-2876181
විද්‍යුත් තැපෑල மின் - அஞ்சல் E - mail } info@psc.gov.lk
වෙබ් අඩවිය இணையத்தளம் Website } www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla

මගේ අංකය எனது இல. My No. PSC/DIS/01/07/202
ඔබේ අංකය உமது இல. Your No.
දිනය திகதி Date .08.2024

பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைக் கடிதம் : 03/2024
அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும்
திணைக்களத் தலைவர்கள்

பதவி வெறிதாக்கல் அறிவித்தல்களுக்கு எதிராக மேன்முறையீடுகளை சமர்ப்பித்தல்

அரச உத்தியோகத்தர்கள் அறிவிக்காது கடமைக்கு சமுகமளிக்காமையின் காரணமாகப் பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் 213 மற்றும் 214 ஆம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் சில சந்தர்ப்பங்களில் போதிய மற்றும் நியாயமான காலப்பகுதியொன்று வழங்கப்படாமையினால் உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதனைப் பகிரங்க சேவை ஆணைக்குழு அவதானித்துள்ளது. அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் பதவி வெறிதாக்கல் அறிவித்தல்களை வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் எடுக்கின்றது என்பதையும் அவதானித்துள்ளது.

02. எனவே, இந்நிலைமைகளைத் தவிர்ப்பதன் பொருட்டு ஏற்புடைய உத்தியோகத்தர் கடமைக்கு சமுகமளிக்காத தினத்திலிருந்து ஐந்து (05) வேலை நாட்களின் பின்னரான முதலாவது ஐந்து (05) வேலை நாட்களுக்குள் திணைக்களத் தலைவர்/நியமிப்புச் செய்யும் அதிகாரி/ ஒழுக்காற்று அதிகாரி பதவி வெறிதாக்கல் அறிவித்தலை வழங்குதல் வேண்டும். அவ்வாறு எவரேனுமொரு உத்தியோகத்தருக்குப் பதவி வெறிதாக்கல் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த பதவி வெறிதாக்கல் அறிவித்தல் தொடர்பில் அவர் காரண விளக்கமளிப்பின், அக் காரண விளக்கத்தைப் பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 216 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. அவ்வாறே, எவரேனுமொரு உத்தியோகத்தர் பதவி வெறிதாக்கல் அறிவித்தலுக்கு ஏற்புடையதாக சுய விருப்பின் பேரில் சமர்ப்பிக்கும் காரண விளக்கம் தொடர்பில், ஏற்புடைய ஒழுக்காற்று அதிகாரியினால் வழங்கப்படும் தீர்மானத்தை உத்தியோகத்தருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். ஒழுக்காற்று அதிகாரியின் குறித்த தீர்மானம் தொடர்பில் திருப்தியடையாவிடின், பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதி 222 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உரிய காலப்பகுதிக்குள் மேன்முறையீடொன்றைப் பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க முடியும் என்பதைத் தீர்மானத்தை அறிவிக்கும் கடிதத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு